**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண். 702/2024 நாள்- 29.11.2024

**வா.சா.1- சேசுராசா**

**<u>வா.சா.1-ன் குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

எனக்கு பிரதிவாதியை நிலம் புரோகர் மூலமாக தெரியும். நான் என் மகனுக்காக இடம் வாங்கவேண்டும் என்று நிலப்புரோகரிடம் ஏற்கனவே சொல்லியிருந்தேன். இந்த இடத்திற்கான நில புரோக்கர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு சுமார் 2 செண்டிற்குள் தளவாய்புரம் ஊருக்குள் இடம் இருந்தாலும் போதுமானது என்று சொல்லியிருந்தேன். நான் குடியிருக்கும் இடமும் , தொழில் செய்யும் இடமும் இரண்டுமே முகவூரில் தாய் டெக்ஸ்டைல்ஸ் தெருவில் உள்ளது. பிரதிவாதி அவருடைய இடம் கூரைப்பள்ளிக்கூடத்திலிருந்து மலைக்குச் செலும் வழியில் அடிவாரத்தில் உள்ளது. அது காமராஜர் நகருக்கு கிழக்கு பக்கம் உள்ளது. என் வீட்டி்றகும் தாவா இடத்திற்கும் இடையே சுமார் ½ கிலோமீட்டர் குறைவாக தான் இருக்கும். நான் பிரதிவாதியின் இடத்தை பார்வையிட்ட பின்புதான் முன்பணம் தொகை கொடுத்தேன். 28.11.2022 அன்று நான் முன் பணம் ரூ.3,80,000/- கொடுத்தேன் இடத்திற்கு மதிப்பாக ரூ.4,00000/- பேசப்பட்டது. பிரதிவாதி என்னை சுமார் 1 வாரத்திற்கு முன்பாக சந்தித்த போது இடம் பற்றிய விவரம் பேசப்பட்டது. அதற்கு முன்பாக வேறு எந்த நில புரோகரும் பிரதிவாதி இடம் விற்பதாக என்னிடம் கூறவில்லை. எனக்கு அதற்கு முன்பாக பிரதிவாதியை எனக்கு யார் என்று தெரியாது. நான் இந்த இடம் வாங்க கிரைய ஒப்பந்தம் வேறு யாரிடமும் செய்தது இல்லை. பிரதிவாதி ஒரு மாலை நேரத்தில் திருவிழா நடக்கும் நேரத்தில் அந்த ஊருகளுக்கு சென்று வியாபாரம் செய்து வரும் நபர் என்றால் சரிதான். பிரதிவாதி எவ்வளவு ருபாய் வருமானம் பெறுவார் என்று எனக்கு தெரியாது. அவர் எழுதப்படிக்க தெரியாத நபர் என்று எனக்கு

தெரியுமா என்று கேட்டால் கிரைய ஒப்பந்ததை பார்த்த போது அவர் கையொப்பத்தை பார்த்து அவர் படிப்பறிவு இல்லாதவர் என்று தெரிந்து கொண்டேன். அந்த கிரைய பத்திர ஒப்பந்தத்தில் 1 மாதம் காலத்திற்குள் மீதத்தொகை ரூ.20,000/- நான் செலுததி கிரையம் முடிக்க வேண்டும் என்று நிபந்தனை உள்ளது என்றால் சரிதான். மீதத் தொகை ரூ.20,000/- என் கைவசம் இருந்தது நல்ல நாள் பார்த்து கிரையம் முடிக்க வேண்டுமஎன் பதால் தான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டோம். 1 மாதத்திற்குள் கிரையம் செய்து கொள்கேிறன என்று நான் கூறிய விருப்பத்தை பிரதிவாதி அப்போது ஏற்றுக் கொண்டார். நான் 1 மாதம் கழித்து சென்ற போதும் கூட பிரதிவாதி முடிப்போம் என்று தான் இழுத்து வந்தார். நான் கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்பாக சொத்தில் வில்லங்கம் இல்லை என்று தெரிந்த கொண்ட பின்புதான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டேன். சொத்திற்கான வில்லங்கச சான்றிதழ் லும் போட்டு பார்த்தேன். சொத்திற்கான மூல ஆவணத்தை பார்த்தேன். சொத்து பிரதிவாதியின் அம்மா பெயரில் இருந்தது. பிரதிவாதியின் அம்மா பெயரிலிருநது சொத்தை பிரதிவாதி பெயருக்கு மாற்றிக் கொண்டார் அது எப்போது என்று எனக்கு தெரியாது. அது என்ன வகையான ஆவணம் என்று எனக்கு தெரியாது. ரூபாய் கொடுப்பதற்கு முன்பாக நான் அசல் மூல ஆவணங்களை பார்வையிட்டேன். நான் மூல ஆவணங்களின் அசல் மற்றும் நகலை பெறவில்லை. அசல் ஆவணம் என் கைவசம் தான் உள்ளது என்றும் நான்அசல் ஆவணங்கள் இல்லை என்று இந்த வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்வதற்கு முன்பாக பத்திர எழுத்தர் காளிராஜ் என்பவரை பார்த்தேன் அவர் தான் 28.11.2022 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்திற்கான ஆவணத்தை தயார் செய்தார். 30.07.2019 ம் தேதியில் நானும் பிரதிவாதியும் இதே சொத்திற்காக கிரைய ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பபந்ததில் கிரைய தொகையாக

எவ்வளவு பேசப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்ததிற்கு எவ்வளவு முன்பணம் செலுத்தப்பட்டது, எவ்வளவு பாக்கி தொகை செயுலுத்த வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால் ஞாபகம் இல்லை. ஆனால் நான் கொடுத்த பணத்தை திரும்ப பெற்றறுக் கொண்டுவிட்டேன். நான் எப்போது பிரதிவாதியிடமிருந்து 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்ததிற்கான முன் தொகையை பெற்றுக் கொண்டேன் என்று தேதி, வருடம்,மாதம் ஞாபகம் இல்லை. 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை சார்பதிவாளர் அலுவலத்தில் வைத்து தான் நான் ரத்து செய்து கொடுத்தேன். எந்த தேதியில் ரத்து செய்து கொடுத்தேன் என்று தேதி, வருடம், மாதம் ஞாபகம் இல்லை. 28.11.2022 ம் தேதியில் நானும் அபூர்வசாமியும் எத்தனை பத்திரங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம் என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்த அன்றே 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்ததற்கான ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது. அது பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.11.2022 க்கு முன்பாக 30.07.2019 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் போதே எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே அறிமுகம் இருந்தது என்றால் சொன்னால் அறிமுகம் கிடையாது எனக்கு ஞாபகம் இல்லை. என் பெயரில் சேத்துர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வருடத்திற்கு சுமரர் 50 கிரைய ஒப்பந்தம் பதிவாகி உள்ளது என்று சொன்னால் இல்லை. சேத்துர் சார்பதிவாளர் அலுவலகத்தில் என் பெயரில் எத்தனை கிரைய ஒப்பந்தங்கள் பதிவாகி உள்ளது என்று சார்பதிவாளர் அலுவரை அழைத்து விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. 28.11.2022 ம் தேதியில் போட்ட கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்வதற்கு முன்பாக

பார்க்கப்பட்ட வில்லங்க சான்றிதழ் பி.வா.சா.2-ன் கிரைய ஒப்பந்தம் காட்டப்படவில்லை என்று பத்திர எழுத்தர் என்னிடம் கூறினார். பிரதிவாதிக்கு நான் கைமாற்று கடன் கொடுத்து வாங்கியுள்ளேன். நான் பிரதிவாதிக்கு எவ்வளவு ரூபாய் கைமாற்று கடன் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.2- ல் உள்ள தொகை தான் பிரதிவாதிகக்க நான் கைமாற்றுக் கடன் கொடுத்த தொகையாகும். அந்த பி.வா.சா.2- ல் உள்ள கைமாற்றுக் கடன் தொகையை எப்போது கொடுத்தேன், எப்போது வாங்கினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.2-ன் 30.07.2019 - அன்று பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகம் உள்ளது சாட்சி தற்போது ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். பி.வா.சா.2-ல் உள்ள தொகை ரூ.2,50,000/-என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.2-ல் உள்ள தொகை ரூ.2,50,000/- நான் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக் கொண்டு விட்டேன் என்றால் சரிதான். பி.வா.சா.2-ன் உள்ள தொகை ரூ.2,50,000/- த்தை பெற்றுக் கொண்ட அன்று தான் பி.வா.சா.1-ன் ரத்து செய்து கொடுத்தேனா என்று கேட்டாலும் எனக்கு ஞாபகம் இல்லை என்று சொன்னாலும் சரிதான். பிரதிவாதி உண்மையாக வே ரூ.1,50,000/- தான் கடன் பெற்றார் என்றும் ரூ.2,50,000/-த்திற்கு பி.வா.சா.2-ன் கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்து என்று சொன்னால் ஞாபகம் இல்லை. அதனால் நான் ரூ.2,50,000/-த்தை பெற்றுக் கொண்ட பின்பும் வட்டிக்காக புதிய கிரைய ஒப்பந்தம் செய்து கொடுக்கவேண்டும் என்று தான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் எற்பபடுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.2 ன் ரத்து பத்திரமும், வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமும் ஒரே தேதியில் உள்ளது என்று ஞாபகம் உள்ளதா என்று கேட்டடால் ஞாபகம் இல்லை. எனக்கு ஞாபக மறதி இல்லை. நான் வழக்கிற்காக வேண்டி ஞாபகம் இல்லை என்று உண்மையான சங்கதிக்கெதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கைமாற்று கடன்கொடுத்த ரூ.2,50,000/-த்திற்கு வட்டி பெறவில்லை. 30.07.2019 ம் தேதியிலிருந்து

ரூ.1,50,0000 கடனுக்காக ஜீன் 2020 வரை ரூ.4,500/- வீதம் நான் வட்டி பெற்று வந்தேன் என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் பதிவு செய்யும் போது பத்திர செலவை நான் தான் செலவு செய்தேன். 30.07.2019 ம் தேதியிட் கிரைய ஒப்பந்ததிற்கு பத்திர செலவை பிரதிவாதி தான் செலுத்தினார். ரத்து பத்திரத்திற்கான பத்திர செலவை பிரதிவாதி தான் செலுத்தினார். நான் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள கிரைய உடன்படிக்கை என்பது பொய் என்றும் கடன் தொகைககாக பிரச்சனை தான் எனக்கு ம் பிரதிவாதிக்கும் இடையே உண்டு எ ன்றும் அதனால் தான் பி.வா.சா.1, 2 ஆக பதிவு செய்யபட்டு அதன் தொடாச்சியாக வா.சா.1 பதிவு செய்யப்பட்டது என்றும் அதனால் தான் பி.வா.சா.1, 2 ஆவணங்களை பொறுத்த வரை எனக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பிரதிவாதி ஒரு போதும் என்னிடமோ வேறு நபரிடமோ சொத்தைவிற்பதாக கூறவில்லை என்றும் வட்டிக்கு கொடுத்த பணத்திறகாக தான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமாக பதிவு செய்யப்பட்டது என்றும் கிரைய ஒப்பந்தமாக இருந்தாலும் கூட பாக்கி கிரைய தொகை செலுத்த தயாராகவோ விருப்பமாகவோ இருந்தது இல்லை என்றும் நான் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என்னுடைய வழக்க தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.